1971 ஜூலை 23]

இந்தப் பகுதி வாய்க்கால்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எந்த விதமான ஒப்பந்தம் கேரள அரசாங்கத்தோடு செய்து கொள்ளப் பட்டது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்விக்கு தொடர்பில்லை. அடுத்த கேள்வி வரும்போது, இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் அளிக்கிறேன்.

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம்

* 407. வினு:—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் தமிழகம் தண்ணீர் பெறுவதில் கேரள அரசு காலம் கடத்திக்கொண்டு போவதால் "நதி நீர் தகராறுகளை தீர்க்க" நீதிபதிகள் கொண்ட போர்டு நியமிக்க வேண்டும் என 1970–71-ம் ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மத்திய அரசை கேட்டுள்ளதா?

(இ) இல்லை எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ், நதி நீர் பங்கீடு குறித்த சிக்கலான பிரச்சனைகள் எல்லாவற்றையும் இரு மாநில அரசுகளும் பேச்சு வார்த்தைகள்மூலம் சமாதானமாக முடிவு செய்து 29—5—1970-ல் ஒப்பந்தம் ஒன்று கையொப்பம் இட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் போக, நீராற்றில் அணைக் கட்டு வேலை காரணமாக எவ்வளவு ஏக்கருக்கு பயன்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நீராறு அணைக் கட்டு வேலை ஒன்றரைக் கோடி செலவில் துரிதமாக நடைபெறுகிறது. அது ஒரு ஆண்டுக் காலத்திற்குள் முடிவுறும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக் குளம்–ஆழியாறு திட்டத்தின்கீழ் உள்ள வாய்க்கால் காங்கயம் பகுதியில் பாயும்போது, பல நேரங்களில் "டெயில்-எண்ட்"க்கு தண்ணீர் வருவதில்லை. நீராறு திட்டம் நிறைவுபெற்றால், அங்கே ஆண்டுக்கு ஒரு முறை தண்ணீர் விடும் வாய்ப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் எல்லா அணைக்கட்டுகளும் முடிந்தால், 2,40,000 ஏக்கருக்கு ஆண்டுதோறும் தண்ணீர் கிடைக்கும்.

* 408. வினு.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட வேலைகள் காண்ட்ராக்ட் மூலம் நடைபெறுவதை கைவிட்டு அரசே ஏற்று நடத்த உத்தேச முண்டா?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்திலே காண்டிராக்ட் விடுவது, அந்த கண்டிராக்டர்கள் 5, 10 வருஷம் வேலை செய்த வேலையாட்களை வேலைக்கு எடுக்காமல், புதிதாக தொழிலாளர்களை எடுக்கிறார்கள். ஆகவே, அந்த வேலைகளை கண்டிராக்டுக்கு விடாமல், அரசாங்கமே தொழிலாளர்களைக் கொண்டு நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் வகையில் கண்டிராக்டர்கள் 5, 10 வருஷம் வேலைசெய்த தொழிலாளர்களை எடுத்துக் கொள்கிறார்களா இல்லையா என்பதற்கான குறிப்பு என்னிடம் இல்லை. அரசாங்கத்தில் சில தொழிலாளர்கள் "ஓர்க்-சார்ஜ்ட்" தொழிலாளர்கள் என்று பணி புரிகிறார்கள். கண்டிராக்டர் செய்வதை அரசாங்கமே எடுத்து நடத்துவது என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை.

## தமிழ் நாட்டில் சுற்றுப் பயணத் தலங்கள்

* 409. வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சுற்றுப் பயண தலங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சுற்றுப்பயண தலங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்துவதோ குறைப்பதோ அரசு செய்வதில்லை. சில ஊர்கள் சுற்றுலா சிறப்பு பெற்றிருப்பதால் பயணிகளுக்கு வசதிகள் ஏற்படுத்தும் பணியில் அரசு செயல் படுகிறது. ஒரு சுற்றுலா தலத்தின் வளர்ச்சிக்கான அரசின் திட்டங்கள் அத்தலத்திற்கு வந்து போகும் பயணிகளின் எண்ணிக்கையையும், அத்தலத்திலுள்ள சுற்றுலா வளர்ச்சிக்கான சிறப்பையும் பொறுத்திருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்கு வருகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு மக்களுக்கு பல் வேறு இடங்களையும் சுற்றிப் பார்க்கும்போது, நீலகிரி, குற்றாலம் போன்ற இடங்களை அதிகமாக கவர்ச்சி உள்ளதாகச் செய்ய விசேஷ ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருக்கின்ற நல்ல இயற்கை காட்சியுள்ள இடங்களையும், பழங்கால சிற்பங்கள் இருக்கும் இடங்களையும் வளமாகச் செய்து, பாதைகளை அமைத்து அத்தகைய காரியங்களைச் செய்கிறது. வேறு எதையும் செய்வதில்லை. இந்த ஆண்டில் ஏற்காட்டிலும், சிறுமலையிலும் அபிவிருத்தி வேலைகள் செய்யப்படுகின்றன. குன்னூரில் சுற்றுலா கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது.